THANJAVUR MAHARAJA SERFOJI'S

உ

சிவமயம்,

திருவெண்காடரென்னும்

இயற்பெயரினையுடைய

பட்டணத்துப்பிள்ளையார்

1142

திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாடற்றிரட்டு.

இதனுள்

அகவல், கலித்துறை, வெண்பா,

இம்மூன்றும், அடங்கியிருக்கின்றன,

இஃது,

காரைக்கால்,

கிருஷ்ண மூர்த்தி முதலியாரால்

ஷெயூர்

" மநோரஞ்சித விலாச அச்சு யந்திரசாலையிற் "

பதிப்பிக்கப் பட்டது.

1892



உ

கணபதிதுணை.

## பட்டணத்துப்பிள்ளையார்.

# திருப்பாடற்றிரட்டு.

---

### கோயிற்றிருவகவல்.

நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமினமனனே நினைமின்மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய்வாழ்க்கையை யுடலோம்பற்க
பிறந்தனவிவச்கு பிறந்தனமிறக்கும்
தோன்றினமறையு மறைந்தனதோன்றும்
பெருந்தனசிறுக்கும் சிறுந்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கு மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் யுனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனபிறந்தன பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன.
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன.

ஓம்பினையனைத்து மனைத்துநினையோம்பின்
செல்வத்துக்களித்தனை தரித்திரத்தழுங்கினை
சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந்துன்பமு மிருநிலத்தருந்தினை
ஒன்றெனன்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பைத் துச்சிலொதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும்வலிதாக் கருதினையிதனுள்
பூளையும்நீறும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீறுந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி
வளியுமலமும் வழங்குமொருபொறி
சலமுஞ்சீழுஞ் சரியுமொருவழி
உள்ளுறத்தொடங்கி வெளிப்படநாறும்
சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கை யுள்ளுறத்தேர்ந்து
கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலமற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையின் முளைத்தெழுஞ்சோதியை

அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலறக்கென நெக்குநெக்குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே.

(இரண்டாவது கோயிற்றிருவகவல்.)

காதலவேசடிய கலகப்பாதகக்
கன்னியர்மருங்கிற் புண்ணுடனுடங்
காதலுங்கருத்து மல்லானின்னிருதாட்
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூர்ந்த தமியேன்பாங்கிருந்
தங்கோடிங்கோ டலமருங்கள்வர்
ஐவர்கலகமிட் டலைக்குங்கானகம்
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சிறூர்
ஊத்தைப்புன்றோ லுதிரக்கட்டளை
நாற்றப்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றற்றுண்டம் பேச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திடருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
ஓயாநோய்க்கிட வோடுமரக்கலம்
மவிசோகார மரணப்பஞ்சரம்
சேறுறத்துருத்தி தூற்றும்பத்தம்
காற்றிற்பறக்குங் காணப்பட்டம்

விதிதழித்தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப்பாணன் றைக்குஞ்சட்டை
ஈமக்கனலி லிடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்கஞ்சருகு
பவக்கொழுந்தேறுங் கவைகொழுகொம்பு
மண்மாய்மடக்கும் வடிவின்முடிவிற்
பிணமாய்க்கிடக்கும் பிண்டம்பிணமே
ஊறிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிற்குவித்த பூளைகாளைக்
கதிரெதிர்பட்ட கடும்பனிக்கூட்டம்
அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிரமேகத் துருவினருனிழல்
நீறிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்டகாட்சி
அதனினும்பொல்லா மாயக்களங்கம்
அமையுமமையும் பிரானேயமையும்
இமையவள்ளி வாழியென்றேத்த
ஆனந்தத்துத் தாண்டவங்காட்டி
மூண்டுகொண்டருள்கைகின் னருளினுக்கழகு.

(மூன்றாவது கோயிற்றிருவகவல்.)

பாற்கடல்கடையப் படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய சிவனையடைக்கல

அடங்கலுமடங்கிடுங் கடுங்கொலைக்காலனை
மாலெடுத்தடங்கிய கடவுளின்னடைக்கலம்
உலகடங்கலும்படைத் துடையவன்றலைபறித்
திடக்கயிலடக்கிய விறைவனின்னடைக்கலம்
செய்யபொன்னம்பலச் செல்வனின்னடைக்கலம்
ஐயநின்னடைக்கல மடியநின்னடைக்கலம்
மனவழியலைந்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியா வழக்குறுமனனும
ஆணவமலத்துதித் தனைந்ததிலுளைந்திடும்
நினைவைப்புழுவென நெளித்திடுசிந்தையும்
படிறும்பாவமும் பழிப்புறுநினைப்பும்
தவறுமழுக்காறு மிவருபொய்ச்சாப்பும்
கவடும்பொய்யுஞ் சுவடும்பெருஞ்சின
விகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவும்பெருஞ்சின
விகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவும்பணிப்பும்
முக்குணமடமையு மைப்பொறிமயக்கமும்
இடும்பையும்பிணியு விடுக்கியவாக்கையை
உயிரெனுங்குருவு விட்டோடுங்குரம்பையை
எலும்பொநெரம்பு கொண்டிடையிற்பிணைத்துக்
கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழுங்குடிலைச்
செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்குரம்பையும
மலவுடற்குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொல்விலாச்சோற்றுத் துன்பக்குழியைக்

கொலைபடைக்கலம்பல் கிடைச்குங்கூட்டைச
சலிப்புறுவினைப்பல சரக்குக்குப்பையைக்
கோட்சரக்கொழுகும் பீறற்கோணியைக்
கோபத்தீமூட்டுங் கொல்லன்றுருத்தியை
ஐம்புலப்பரவை யடையும்பஞ்சரத்தைப்
பலராக்கவலை விளமரப்பொதும்பை
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரத்தைக்
காசிற்பணத்திற் சுழலுங்காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந்திகிரியை
கடுவெளியுருட்டி யசகடக்காலைப்
பாவச்சரக்கொடு பவக்கடல்புக்குக்
காமக்காற்றுள் காற்றெடுந்தலைப்பைக்
கெடுவழிக்கரைநேர் செம்மரக்கலத்தை
இருவினைவிலங்கொடு மியங்குபுற்சலனை
நடுவன்வந்தழைத்திட நடுக்கிடும்யாக்கையை
பிணமனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
அடிமலர்க்கமலத்துக் கிசையநின்னடைக்கலம்
வெளியிடையிருட்டி யிடித்தெனவெறித்தெழுங்
கடுநடைவெள்விடைக் கடவுணின்னடைக்கலம்
இமையார்கூட்டத் திறையேயடைக்கலம்
அடியார்க்கெளியா யக்கலமடைக்கலம்
மறையவர்தில்லை மன்றுணின்றாடிக்
கருணைமொண்டலையெறி கடலேயடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்தப்
பாசிழைக்கொடியொடு பரிந்தருள்புரியும் .

## நான்காவது கச்சித்திருவகவல்.

எம்பெருமானின் னிணையடிக்கமலம்
அம்பலத்தரசே யடைசகலமுமக்கே
(நான்காவது கச்சித்திருவகவல்.)
திருமால்பயந்த திசைமுகனமைத்து
ஒருமேற்பிறவியு மானுடத்துதித்து
மலைமகள்கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானிடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமார்க்க மெளிவுறக்கேண்மின்
முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைத்தும
வெள்ளெலும்பாலே மேவியேகணைக்காற்
றுள்ளுமவராலெனச் சொல்லித்துதித்தும்
தசையுமெலும்புந் தக்கபுன்குரங்கை
இசையுங்கதலித் தண்டெனவியம்பியும்
நெடுமுடைற்றுங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் வாழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் சீப்பாய்ச்சீறி
உதிராற்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவாற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்

## நான்காவது கச்சித்திருவகவல்.

குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டவும்பிசையவு முதவியுங்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென்னுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தை
பாரினிலினிய கமுகெனப்பகர்ந்தும
வெப்புமூத்தையு மேவியவாயைத்
துப்புமுரிக்கின் றாய்மலரென்றும்
அன்னமுங்கறியு மசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும்
கூரியமூக்கைக் குமிழெனக்கூறியுங்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டின் வளமெனவாழ்த்தியும்
கையுமெண்ணையுங் கலவாதொழியில்
வெய்யவ தரும் பேனும்விளையத்
தக்கதலையொட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண்முகிலென்றும்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகவாயில்
தோலுமிறைச்சியுந் துதைந்தசிப்பாயும்
காம்ப்பகளி கருவிளைகன்னி
தூமைக்கடவழி தொலைபெறுவாசல்

எண்காணுடம்பு மிழியும்பெருவழி
மண்பார்காமங் கழிக்குமறைவிடம்
கஞ்சிக்காமுக னையதாயென்றும்
இச்சித்திருக்கு மிடைவழிவாசல்
திட்கட்சடையோன் றிருவயிளிலவார்
தங்கத்திரியுஞ் சயலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடைவையைமூடு
உண்ணீர்பாயு மோசைச்செழும்புண்
மால்கொண்டழியா மாந்தர்புகும்வழி
நோய்கொண்டழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
சருக்கியசாமுக்கர் சேறுஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கிறபெருவழி
மலஞ்சொரிந்தழியும் வாசற்கருகே
சலஞ்சொரிந்திழியும் தண்ணீர்வாசல்
இத்தைநீங்க ளினித்தெனவேண்டா
முத்திநாதனை மூவர்முதல்வனை
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெய்ச்சிவபத வியனருள்பவனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவடண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போதமாதரைப் போற்றுதலொழிந்தே

நான்காவது கச்சித்திருவகவல் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருவேகம்பமாலை.

அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லலங், து
றந்தானவனிற் சதகோடியுள்ளத்துறவுடையோன், மற
ந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற், றிறந்தா
ன்பெருமைமய் யென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கி மரம்போற்சரீரத்தைவீழ்த்திவிட்டார்
கொட்டிமுழக்கி யழுவார்மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவாகசசியேகம்பனே. (௨)

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத்
தப்புறந்தள்ளி லசையாமன்முன்வைத் தயல்வளவி
லொப்புடன்சென்று துயினித்துப்பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவே னிறைவாகச்சி யேகம்பனே. (௩)

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னார்தப்பினற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ
உன்னாலியானுந் திரிவதல்லான்மற் றுனைப்பிரிந்தா (ல்
லென்னாலிங்காவதுண்டோ விறைவாகச்சியேகம்பனே.

நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமு மைந்தரும்வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே ()

பொல்லாதவனெறி நில்லாதவனையும் புலன்கடமை
வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
செல்லாதவனுண்மை சொல்லாதவனின் றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன் பிறந்தேன்கச்சியேகம்பனே.

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைபிறந்துமண்மே
ல், இறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவி
ற், குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்க
றியார், இறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன் கச்சி
யேகம்பனே. (எ)

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையாவிசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தா யிறைவாகச்சியேகம்பனே. ()

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி,நில்
லாப்பிழையு நினையாப்பிழையுன் னஞ்செழுத்தைச்,
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழை
யு, மெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்
பனே, (கூ)

மாயநட்போரையு மாயாமலமெனு மாதரையும், வீ
யவிட்டோட்டி வெளியேபுறப்பட்டுமெய்யருளாந்,தாயுட
ன்சென்றுபின் றாதையைக்கூடிப்பின் றாயைமறந், தே
யுமதேநிட்டை யென்றானெழிற்கச்சி யேகம்பனே. (ய)

வரிக்கோலவேல்விழி யாரனுராக மயக்கிற்சென்று,
சரிக்கோதுவேனெழுத் தஞ்சஞ்சொலேன் றமியேனுட

ல்வாய், நரிக்கோகழுகு பருந்தினுக்கோவெய்ய நாய்தன
க்கோ,வெரிக்கோ விரையெதுக்கோ விறைவாகச்சியேக
ம்பனே, (௰௧)

காதென்றுமூக்கென்று கண்ணென்றுகாட்டி யென்க
ண்ணெதிரே, மாதென்றுசொல்லி வருமாயைதன்னை ம
றலிவிட்டதூதென்றெண்ணமல், சுகமென்றுநாடுமித் து
ற்புத்தியை, யேதென்றெடுத்துரைப்பே னிறைவாகச்
சியேகம்பனே. (௰௨)

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர்சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே. (௰௩)

சிறும்வினையன் பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினாற்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெறுங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே. ()

பொருளுடையோரைச் செயலிலும்வீரரைப் போர்
க்களத்தும், தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து
தெளிவதுபோ, லருளுடையோரை தவத்திற்குணத்தி
லருளிலயபி, லிருளருசொல்லினுங் காணத்தகு மிறை
வாச்சசியேகம்பனே. (௰௫)

பருத்திப்பொதியினைப் போலேவயிறுபருக்கத்தங்க,
டுருத்திக்கருசுவைப் போடுகிறார்துறந் தோர்தமக்கு, வ
ருத்தியமுதிட மாட்டாரவரையும்மாளிலத்தி, லிருத்தி
க்கொண்டேனிருந்தா யிறைவாகச்சி யேகம்பனே, ()

பொல்லாதவிரளகற் றுங்கதிர்கூகையென் புட்கண்ணினுக், கல்லாயிருந்திடும் மாறெருக்குமேயடி யோருளத்தில், வல்லாற்றிவாரறி வாரறிவார்தமக்கு மயக்கங்கண்டா, யெல்லாம்விழிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

வாதுக்குச்சண்டைக்குட் போவர்வருவர் வழக்குரைப்பர், தீதுக்குதவியுஞ் செய்திடுவார் தினந்தேடியென்று, மாதுக்கழித்து மயங்கிடுவார்விதி மாளுமட்டும், ஏதுக்கிவர்பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே. (௰௮)

ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்ப ருற்றுப்பெற்ற, தாயாரைவைவர் சதியாயிரஞ்சொல்வர் சாத்திரங்க, ளாயார்பிறர்க்குப காரஞ்செயார்தமை யண்டினர்க்கொன், றியாரிருந்தென்ன போயென்னகாண்கச்சி யேகம்பனே. (௰௯)

அப்பென்றும்வெண்மைய் தாயினுமாங்கந் நிலத்தியல்பாயத், தப்பின்றியேகுண வேற்றுமைதான்பல சார்தலினாற், செப்பின்றிபக்குவம் பக்குவமாயுள்ள சீவனிலு, மிப்படியேநிற்பே னெந்தைபிரான்கச்சி யேகம்பனே ()

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்
தாயார்வயிற்றி னரராய்ப்பிறந்துபின் சம்பன்னாய்க்
காயாமரமும் வறளாங்குளமுங் *கல்லாவுமென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய்கச்சி யேகம்பனே. ()

* கல்லாவு-கற்பசு. இதுவுமுவமையணி.

ஆற்றிற்கரைத்த புளியாய்க்கிடாமலே யென்னையெல்
லாம், போற்றித்திருவுளம் பற்றுமையாபுர மூன்றெரித்
துக், கூற்றைப்பணிகொள்ளுந் தாளுடையாய் குன்றுவில்
லுடையா, யேற்றுக்கொடியிடையா யிறைவாகச்சியேக
ம்பனே. (உஉ)

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்
னைக். கண்ணால்வெருட்டி முலையால்மயக்கிக் கடித்தடத்
துட், புண்ணாங்குழியிடைத் தள்ளியென்போதப் பொ
ருள்பறிக்க, வெண்ணாதுனைமறந் தேனிறைவாகச்சியேக
ம்பனே. (உ௩)

நாவாரவேணவிதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்தாற்,
சாவேனென்றேயிருந் தோக்கவுண்பார்கள்கை நான்வர
ண்டாற், போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும் பூ
வையருக், கீவார்தலைவிதியோ விறைவாகச்சியேகம்ப
னே. (உ௪)

கல்லார்சிவகதை நல்லோர்தமக்குக் கனவிலுமெய்,
சொல்லார்பசித்தவர்க் கன்னங்கொடார்குரு சொன்னப
டி, நில்லாரறத்தை நினையார்நின்னாம நினைவிற்சற்று, மி
ல்லாரிருந்தென் னிறந்தென்புகல்கச்சி யேகம்பனே. ()

வானமுகத்தின் சுவையறியாதவர் வண்கனியின், ஞா
னமுகத்தின் சுவையெண்ணல்போலத் தனித்தனியே,
தேனமுகத்தின் றெளிவாயஞானஞ் சிறிதுமில்லாக், கீ
னமுதச்சுவை நன்றல்லவோகச்சி யேகம்பனே. (உ௬)

* ஏறு எருது.

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலை யூன்பொதிந்
த, பீற்றற்றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பே
சரிய, காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்
செய்தே, யேற்றுத்திரிந்துவிட்டே னிறைவாகச்சியேக
ம்பனே. (௨௭)

சொல்லால்வருங்குற்றம் சிந்தனையால்வருந் தோடஞ்
செய்த, பொல்லாததீவினைப் பார்வையிற் பாவங்கள்பு
ண்ணியநா, லல்லாதகேள்வியை கேட்டிடுந்தீங்குகளாய
வுமற், றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே
கம்பனே. (௨௮)

முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டு
பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மே
லிஷ்டத்தைநீதவிர்ப்பா யிறைவாகச்சியேகம்பனே. ()

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டு பேரின்பத்
தை, மறந்துசிற்றின்பத்தின் மேன்மையலாகிப் புன்மா
தருக்குட், பறந்துழன்றேதடுமாறிப் பொன்றேடியப்பா
வையர்க்கீந், திறந்திடவோபணிந்தா யிறைவாகச்சியேக
ம்பனே. (௩௰)

பூதங்களற்றுப்பொறியற்று சாரையும்புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப்பின்முனற்று

காதங்கரணங்களுமற்ற வானந்தகாட்சியிலே
யேதங்களைந்திருப்பே னிறைவாகச்சியேகம்பனே. ()

நல்லாயெனக்குமனுவொன்று தந்தருண் ஞானமிலா
ப், பொல்லாவெனைக்கொன்று போடும்பொழுதுபூசை
செபமுஞ், சொல்வார்நற்கோயினியம் பல்வகைதோத்திர
மு, மெல்லாமுடிந்தபின் கொல்லுகண்டா யிறைவாகச்
சியேகம்பனே. (கஉ)

சடக்கடத்துக்கிரைதேடிப் பலவுயிர்தன்னைக்கொன்
று, விடிக்கடித்துக்கொண்டிறுமார்திருந்து மிகமெலிந்
து, படக்கடித்தின்றுழல்வார் கட்டமைக்கரம்பற்றிநமனி
டச்கடிக்கும்பொழுதேதுசெய்வா ரிறைவாகச்சியேகம்
பனே. (கங)

நாறுமுடலைநறிப்பொதிசோற்றினை நான்றினமுஞ்
சோறுங்கறியுநிறப்பிய பாண்டத்தைத்தோகையர்தங்
கூறுமலமுமிரத்தமுஞ் சீழுங்குழியில்விழா
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. (கச)

சொக்கிட்டரமனைப்புக்குட்டிருடியதுட்டர்வந்து, திக்
குற்றமன்னரைக்கேட்பதுபோற்சிவநிந்தைசெய்து, மி
க்குக்குருலிங்கசங்கம நிந்தித்துவீடிச்சிக்கு, மெகதுப்
பெருத்தவர்க்கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே, ()

விருந்தாகவந்தவர் தங்களுக் கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார் நின்னாமத்தைப்போற்
றிசித்த, மருந்தாமுலைப்பங்க ரென்னாதபாதகரம்புவியி
விருந்தாவதேதுகண்டா யிறைவாகச்சியேகம்பனே. ()

எல்லாமறிந்துபடித்தேயிருந்தெமக்குள்ளபடி, வல்லா
னறிந்துளனென்றுணராதுமதிமயங்கிச், சொல்லான்ம
லைந்துறுசூழ்விதியின்படித்துக்கித்துப்பி,னெல்லாம்சிவ
ன்செயலென்பார்கா ணிறைவாகச்சியேகம்பனே. ()

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர் பூவையன்ன
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியில்
உன்னைநினைந்திங் குனைப்பூசியாதவுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டா யிறைவாகச்சியேகம்பனே. ()

கடுஞ்சொல்லின்வம்பரை யீனரைக்குண்டரைக்காமுக
ரைக், கொடும்பவமேசெயு நிர்மூடர்தம்மைக்குவலயத்
து, னெடும்பனைபோல வளர்ந்துநல்லோர்நெறியறியா
விடும்பரையேன்வகுத்தா யிறைவாகச்சியேகம்பனே. ()

கொன்றேனனேக முயிரையெல்லாம்பின்புகொன்று
கொன்று, தின்றேனதன்றியுந்தீங்குசெய்தே னதுதீர்க்க
வென்றே, நின்றேநின்சந்நிதிக்கேயதனாற் குற்றநீபொறு
ப்பா, யென்றேயுனைநம்பினே னிறைவாகச்சியேகம்ப
னே, (சய)

எண்சீர்க்கழிநெடிலாசிரியப்பா.

அன்னையெத்தனை யெத்தனையன்னையோ, வப்பனெத்தனையெத்தனையப்பனோ, பின்னையெத்தனையெத்தனை பெண்டிரோ, பிள்ளையெத்தனையெத்தனைபிள்ளையோ, முன்னையெத்தனை யெத்தனைசென்மமோ, மூடனாயடியேனுமறிந்திலே, னின்னமெத்தனையெத்தனைசென்மமோ வென்செய்வேன் கச்சியேகம்பநாதனே. (௪௧)

திருத்தில்லை.

காம்பிணக்கும்பணைத்தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்குந், தாம்பிணங்குமபல வாசையும்விட்டுத்தனித்துச்செத்துப், போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப்புரண்டினிமேல், சாம்பிணங்கத்துதையோ வென்செய்வேன் றில்லைச்சங்கரனே. (௧)

சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந் தீவினையெப்பொழுதும்
நீறிடுமேனியர்சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே. (௨)

அழகுள்ளவெண்ணையெனவேயுருகிப் பொன்னம்பலத்தார், நிழலுக்குணின்றுதவமு ஞற்றுமனிட்டேரமின்னர், குழலுக்கிசைந்தவகை மாலைகொண்டு குற்றேவல்செய்து, விழலுக்குமுத்துலையிட்டிறைத்தேனென் விதிவசமே. (௩)

ஓடாமற்பாழுக் குணழியாமலோர முறைப்பவர்பாற்
கூடாமனல்லவர்கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சி
நாடாமனன்மைவழுவாமனின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே. (௪)

பாராமலேற்பவர்க் கில்லையென்னுமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள் வந்தணுகாமன்மனமயர்ந்து
பேராமற்சேலைவ்பிரியாமலன்பு பெருதவரைச்
சேராமற்செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே. (௫)

கொல்லாமற்கொன்றதைத் தின்னுமற்குத்திரங்கோ
ள்களவு, கல்லாமற்கைதவரோடிணங்காமற் கனவினும்
பொய், சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர்மா
யையிலே, செல்லாமற்செல்வந்தருவாய் சிதம்பரதேசிக
னே. (௬)

முடிசார்ந்தமன்னருமற்று முள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பலாய்வெந்து மண்ணாவதுங்கண்டுபின்னுமிந்த
ப், படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற்பொன்னினம்ப
லவ ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரிலையே

காலையுபாதி மலஞ்சலமாமன்றிங்கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமாகுமுற்சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காமமாமிவை மாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவா வென்னையாண்டருளே. ()

ஆயம்புகழ்தில்லையம்பலவாணரருகிற்சென்றுற்
பாயுமிடபங்கடிக்குமரவம்பின் பற்றிச்சென்றுற்

பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும்பின்றொடரும்
போயென்செய்வாய்மனமே பிணக்காடவர்போமிடமே.

ஓடுமெடுத்து ளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கி யேவிதியற்றவர்போ [லைத்
லாடுமருட்கொண்டிங்கம் பலத்தேநிற்குமாண்டிதன்
தேடுங்கணக்கென்னசாண் சிவகாமசவுந்தரியே.

ஊட்டுவிப்பானுமுறங்குவிப்பானு மிங்கொன்றை
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை
காட்டுமிப்பானுமிருவினைப் பாசங்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே.

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங் காணாதநித்தநிமலனருட்
குடிகாணுநாங்க ளவர்காணுமெங்கள்குலதெய்வமே. ()

தெய்வசிதம்பர தேவாவுன்சித்தந் திரும்பிவிட்டால்
பொய்வைத்தசொப்பன மாமன்னர்வாழ்வும்புவியுமெங்
கே, மெய்வைத்தசெல்வமெங்கே மண்டலீகர்தம்மே
டையெங்கே. (௰௩)

உடுப்பானும் பாலன்னமுண்பானு மூய்வித்தொருவ
ர்தம்மைக், கெடுப்பானுமேதென்று கேள்விசெய்வானு
ங்கெதியடங்கக், கொடுப்பானுந்தேசியென்றேற்பானு
மேற்கக்கொடாமனின்று,தடுப்பானுநீயல்லையோ தில்லை
யானந்தத்தாண்டவனே. (௰௪)

வித்தாரம்பேசினுஞ்சோங்கேரினுங்கம்பமீதிருந்தும்[பி
த்தாவென்றோதிப் பவுரிகொண்டாடினுந்தன்முன்தம்
ஒத்தாசைபேசினு மாவதுண்டோ தில்லையுண்ணிறைந்த
கர்த்தாவின்சொற்படி யல்லாதுவேறில்லைசன்மங்களே.

பிறவாதிருக்க வரந்தரல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகா ணிதுவெப்படியோ
வறமார்புகழ்தில்லை யம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாணன்மருந்துனக்கே. (௰௬)

தவியாதிருநெஞ்சமே தில்லைமேவியசங்கரனைப், புவியா
ர்துதிக்கின்ற ஞானகரனைப்புராந்தகனை, யவியாவிளக்
கையென் னம்பலத்தாடியை யைந்தெழுத்தாற், செவி
யாமனீசெவித்தாற் பிறவாமுத்திசித்திக்குமே. (௰௭)

நாலின்மறைப்பொரு ளம்பலவாணரைநம்பியவர்
பாலிலொருதரஞ் சேவிக்கொணாதிருப்பார்க்கருங்கல்
மேலிலெடுத்தவர் கைவிலங்கைத்தப்பர்மீண்டுமொரு
காலினிருத்துவர் கிட்டியுந்தாழ்வந்துகட்டுவரே. ( )

ஆற்றோடுதும்பை யணிந்தாடுமம்பலவாணர்தம்மைப்
போற்றாதவர்க்கடை யாளமுண்டோயிந்தப் பூதலத்திற்
சோற்றாவியற்றுச் சுகமற்றுச்சுற்றத்துணியுமற்றே
யேற்றாலும்பிச்சை கிடையாமலேக்கற்றிருப்பர்களே.

அத்தனைமுப்பத்து முக்கோடிதேவர்க்கதிபதியை
நித்தனையம்மை சிவகாமசுந்தரிநேசனையும்
சுத்தனைப்பொன்னம்பலத்தாடு மையனைக்காணக்கண்க
ளெத்தனைகோடி யுகமோதவஞ்செய்திருக்கின்றவே.

திருச்செங்காடு.

நெருப்பானமேனியர் செங்காட்டிலாத்திநிழலருகே
யிருப்பார்திருவுளமெப்படியோ வின்னமென்னையன்னை
கருப்பாசயக்குழிக்கே தள்ளுமோகண்ணன்காணரிய
திருப்பாதமேதருமோ தெரியாதுசிவன்செயலே. (உக)

திருவொற்றியூர்

ஐயந்தொடர்ந்து விழியுஞ்சொருகியறிவழிந்து, மெய்யும்பொய்யாகி யிடுகின்றபோதென்றுவேண்டுவென்யான், செய்யுந்திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக், கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே. (உஉ)

சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பதந் தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாணமனமே விதியேட்டைக்கிழிப்பதுவே. ()

திருவிடைமருதூர்

காடேதிரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தைசுற்றி, ஓடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்குவிண்ணோர், நாடேயிடையூரீசர்க்குமெய்யன்பர் நாரியர்பால், வீடேயிருப்பினுமெய்ஞ்ஞானவிட்டின்ப மேவுவரே. (உச)

தாயும்பகைகொண்ட பெண்டிர்பெரும்பகைதன்னுடைய, சேயும்பகையுற வோறும்பகையிச் செகமும்பகை, பாயும்பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங்காதலினாற் றோயுநெஞ்சேமரு தீசர்பொற்பாதஞ்சுதந்தரமே. ()

திருக்கழுக்குன்றம்

காடோசெடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல்வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

திருக்காளத்தி.

பத்தும்புகுந்துபிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண் கயிலாயபுரிக்காளத்தியே. ()

பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தார்க்குண்டு
பொன்படைத்தோன், றன்னாற்பிரயோசனம் பொன்னு
க்கங்கேதுண்டத்தன்மைபோல், உன்னாற்பிரயோசனம்
வேணுதெல்லாமுண் டுனைப்பணியு. மென்னாற்பிரயோச
னமேதுண்டுகாளத்தி யீச்சுரனே. (உஅ)

வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்
ன, சூளாலிளமை துறக்கவல்லேனல்லன் றொண்டுசெ
ய்து, நாளாறிற்கண்ணிடந் தப்பவல்லேனல்ல னானினி
ச்சென், றாளாவதெப்படியோ திருக்காளத்தியப்பருக்
கே (உகூ)

முப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவு மோசத்தினாற்
செப்போதிளமுலை யாருடன்சேரவும் சிவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன் றிருக்காளத்தியீச்சுரனே.

இரைக்கேயிரவும் பகலுந்திரிந்திங் கிளைத்துமின்னு
ரைக்கேயவல்க் குழியருகோசுகம் பார்த்தொழுகும்[க்
புரைக்கேயுழலுந் தமியேனையாண்டருள் பொன்முகலி
கரைக்கேகல்லால் நிழற்கீழமர்ந்தருள் காளத்தியே. ()

நாறுங்குருதிச் சலதாரைதோற்புரை நாடிரைஞ்சி
யூறுமலக்குழி காமத்துவார மொலித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப்பந் தரங்கத்துய சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தியீச்சுரனே. (௩௨)

கைலாயம்

கான்சாயும்வெள்ளி மலைக்கரசேநின் கழனம்பினே
னூன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய்கர வூரணுக்காய்
மான்சாயச்செங்க மழுவலஞ்சாய வனைந்தகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே. ()

இல்லந்துறந்து பசிவந்தபோதம் கிரந்துதின்று [றிச்
பல்லுங்கறையற்று வெள்வாயுமாயொன் றிற் பற்றுமின்
சொல்லும்பொருளு மிழந்துசுகானந்தத் தூக்கத்திலே
யல்லும்பகலு மிருப்பதென்றோ கைலாயத்தனே.

சினந்தனையற்று பிரியமுந்தானற்று செய்கையற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிர்ச்சித்தனாய்த்
தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வனந்தனியென்றிருப்பே னத்தனேகைலாயத்தனே. ()

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று சரித்துணியைத்
தையாதுடுத்துநின் சந்நிதிக்கேவந்து சந்ததமு

மெய்யாரிற்பணி துள்ளேயுரோமம் விதிர்விதிர்ப்ப
ஐயாவென்றேல மிடுவதென்றே கைலாயத்தனே. ()

நீருர்த்தமேனியு ரோமஞ்சிலிர்த்துள நெக்குநெக்குச்,
சேருய்க்கசிந்து கசிந்தேயுருகிநின் சீரடிக்கே,மாருத்தி
யானமுற் றனந்தமேற்கொண்டு மார்பில்கண்ணீர், ஆ
ருய்ப்பெருகக் கிடப்பதென்றே கைலாயத்தனே. ()

செல்வரைபின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக்காட்டிப் பரதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக் காமிட்டதே
யல்லாலென்றிருப்பே னத்தனேகைலாயத்தனே. ()

மந்திக்குருளையொத் தேனில்லைநாயேன் வழக்கறிந்து
ஞ், சிந்திக்குஞ்சிந்தையை யானென்னசெய்வே னென்னை
த்தீதகற்றிப், புந்திப்பரிவிற் குருளையையேந்திய பூசை
யைப்போல், எந்தைக்குரியவன்கா ணத்தனேகைலாய
த்தனே. (௩௪)

வருந்தேன்பிறந்து மறந்துமபக்கும் புலன்வழிபே ய்
பொருந்தேனரகிற் புகுகின்றிலேன்புகழ் வாரிடத்தி
லிருந்தேனினியவர் கூட்டம்விடேனிய லஞ்செழுத்தா
மருந்தேனருந்துவ னின்னருளாற் கைலாயத்தனே. ()

மதுரை

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியேதின மேயலையக்
கடப்படுமோவற்பர் வாயலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
புடைப்படுமோசொக்கநாத சௌந்தரபாண்டியனே. ()

உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணை யுண்டு ணவிங், கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந் துணைக்கே, விடையேறுமீசர் திருநாமமுண்டிந்த மேதி னியில், வடகோடுயர்ந்தென்ன தென்கோடுசாய்ந்தென் ன வான்பிறைக்கே. (க)

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திர மோங்குசெல்வம்
நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொல்லவோவொருவரு மிங்கில்லையே. ( )

நாடிக்கொண்டீசரை நாட்டமுற்றாயிலைநாதரடி, தே டிக்கொண்டாடித் தெளிந்தாயிலைசெகமாயைவந்து, மூ டிக்கொண்டோமென்றுங் காமாயுதங்கண் முனிந்தவெ ன்றும், பீடிப்பையோநெஞ்சமே யுனைப்போலிலைப் பி த்தர்களே. (ங)

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொ ன்றெண்ணப், பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப் புலால்கமழும், மெய்யொன்றுசாரச் செவியொன்றுகே ட்கவிரும்புமியான், செய்கின்றபூசையெவ்வாறு கொள் வாய் வினைதீர்த்தவனே. (ச)

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துரு கிப், பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சி லையா, லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச னிருக்கை யிலே, மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானு டமே. (ரு)

சொல்லினுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதியி
லு, மல்லினுமாசற்ற வாகாயந்தன்னினு மாய்ந்துவிட்
டோ, ரில்லிலுமன்ப ரிடத்திலுமீசனிருக்குமிடங், கல்
லினுஞ்செம்பினுமோ விருப்பானெங்கள்கண்ணுதலே.

வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொ
ழிந்தாற், றினைப்போதளவு நில்லாதுகண்டாய்சிவன்பா
தநினை, நினைப்போரைமேவு நினையாரைநீங்கி நெறியி
னின்று, லுனைப்போலொருவருண்டோமனமேயெனக்
குற்றவரே (ஏ)

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப்பதிந்தெடுத்து,
முட்டச்சுருட்டியென் மொய்க்குழலாள்கையின் முன்
கொடுத்துக், கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்
லாம், விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்ட
துவே. (அ)

கூதற்றகொங்கையு மானார்கலவியுஞ் சூழ்பொருளு
ம், போதுற்றபூசலுக் கென்செய்வான்செய்த புண்ணிய
த்தாற், றீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்
கோ, காதற்றவூசியைத் தந்துவிட்டானெங் தன்கைத
னிலே. (கூ)

வாதுற்றதிண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்,
போதுற்றெப்போதும் புசலுநெஞ்சேயிந்தப் பூதலத்தி
ற், றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்ததிரவியமென்,
காதற்றவூசியும் வாராதுகாணுங்கடைவழிக்கே (ய)

வேதத்தினுட்பொருண் மண்ணாசைமங்கையை விட்
டுவிட்ட, போதித்தவன்மொழி கேட்டிலையேசெய்த பு

ண்ணியத்தா, லாதித்தன்சந்திரன் போலேவெளிச்சம
தாம்பொழுது, காதற்றவூசியும்வாராதுகாணுங் கடைவ
ழிக்கே. (௰௧)

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன்வாசன்மட்டே
யினமானசுற்ற மயானமட்டேவழிக்கேதுதுணை
தினையாமல்வெள்ளள வாகினமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே()

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழியப்பொழுகும்
மெத்தயமாதரும் வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலைமேல்வைத் தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப்புண்ணியபாவமுமே (௰௩)

சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன்றில்லாதபோதுபகலிரவாய்
யீயுமெறும்பும் புகுகின்றயோனிக்கிரவுபகல்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே, (௰௪)

நிதப்பணிக்குண்டு சிக்கெனக்கந்தைதினமிரந்து
ந் துய்க்கச்சோறுமனைதோறுமுண்டுநினைவெழுந்தால்
விதிக்குணல்ல விலைமாதருண்டிந்தமேதினியி
லேதுக்குநீசலித்தாய் மனமேயென்றும்புண்படவே, ()

ஆறுண்டுதோப்புண் டணிவீதியம்பலத் தானுமுண்டு
நீறுண்டுகந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த

மாறுண்டுலாவி மயங்கிநெஞ்சேமனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின் சும்மாவிருக்கச்சுகமுமுண்டே.

உடுக்கக்கவிக்கக் குளிர்காற்றுவெய்யி லொடுங்கிவந்தால், தடுக்கப்பழைய வொருவேட்டியுண்டுசகமுழுதும், படுக்கப்புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தால், கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்குக்குறைவில்லையே. (௰௭)

மாடுண்டுகன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங், கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமினிக்கேண்மனமே, யோடுண்டுகந்தையுண் டுள்ளேயெழுத்தைந்துமோதவுண்டு, தோடுண்டகண்ட னடியார்தமக்குத்துணையுமுண்டே. (௰௮)

மாத்தானவத்தையு மாயாபுரியின்மயக்கத்தையு,
நீத்தார்தமக்கொரு நிட்டையுண்டோநித்தனன்புகொண்டு,வேர்த்தாற்குளித்துப பசித்தாற்புசித்து விழித்துயின்று,பார்த்தாலுலகத் தவர்போலிருப்பர்பற்றற்றவரே.

ஒன்றென்றிருதெய்வ முண்டென்றிருவுயர் செல்வமெல்
மன்றென்றிருபசித் தோர்முகம்பார்நல் லறமுநட்பு [லா
நன்றென்றிருநடு நீங்காமலேநமக் கிட்டபடி
யென்றென்றிருமனமே யுனக்கேயுபதேசமிதே, (௨௰)

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தைநம்பு, பொம்ம
லாட்டமென்றேயிரு பொல்லாவுடலையடர்ந்தசந்தைக,
கூட்டமென்மேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ,
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக்குபதேசமிதே. ()

என்செயலாவதி யாதொன்றுமில்லையினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்துமூண்டதுவே.

திருவேடமாகித் தெருவிற்பயின்றெனைத்தேடிவந்து
பரிவாகப்பிச்சை பசருமென்றுனைப் பதம்பணிந்தேன்
சருவாகுமேதற் கடற்கரைமேவக் சருதுமென்னை, யுரு
வாக்கிக்கொள்ளவல்லோ விங்ஙனேசிவனுற்றதுவே. ()

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வீணருடன், கிட்
டேனவரை கேட்டுமிரேன்மெய்கெடாதநிலை, தொட்
டேன்சுகதுக்க மற்றுவிட்டேன்றொல்லை நாண்மறைக்கி,
மெட்டேனெனும்பர மென்னிடத்தேவந்திங் கெய்திய
தே. (௨௪)

அட்டாங்கயோகமு மாதாரமாறுமவத்தையைந்தும்,
விட்டேறிப்போன வெளிதனிலேவியப் பொன்றுகண்
டேன், வட்டாகிச்சம்மதிப் பாலூறலுண்டு மகிழ்ந்திருக்
க, வெட்டாதபேரின்பமென்னைவிழுங்கி யிருக்கின்றதே.

எரியெனக்கென்னும் புழுவோவெனக்கென்னு மிந்த மண்ணுஞ், சரியெனக்கென்னும் பருந்தோ வெனக்கெனுந்தான்புசிக்க, நரியெனக்கென்னும்புன் னாயெனக்கென்னுமிந்நாறுடலைப், பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்னபேறெனக்கே. (௨௬)

அண்ணறன்வீதி யரசிருப்பாகு மணிபடையோர், நன்றொருநாலொன்ப தாமவரேவலுநண்ணுமிவர், துண்ணென்பசிக்கு மடைப்பள்ளியான சுகமுமெல்லா, மெண்ணலிகால மவமேவிடுத்தனமெண்ணரிதே (௨௭)

என்பெற்றதாயாருமென்னைப்பிணமென் றிகழ்ந்துவிட்டார், பொன்பெற்றமாதரும் போவென்றுசொல்லிப் புலம்பிவிட்டார், கொன்பெற்றமைந்தரும் பின்வலம்வந்துகுடமுடைத்தா, ருன்பற்றொழிய வொருபற்றுமில்லையுடையவனே. (௨௮)

கறையற்றபல்லுங் கரித்துணியாடையுங் கள்ளமின்றிப், பொறையுற்றநெஞ்சமும் பொல்லாதவீனும் புறந்திண்ணையுந், தறையிற்கிடப்பு மிரந்துண்ணுமோடுஞ்சகமறியக், குறைவற்றசெல்வமென்றே கோலமாமறைகூப்பிடுமே. (௨௯)

எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றாய், முட்டித்ததும்பிமுளைத்தோங்கு ஞ்சோதியைமூடரெல்லாங், கட்டிச்சுருட்டித் தங்கக்கத்தில்வைப்பார் க

ருத்திலவையார், பட்டப்பகலை யிரவென்றுகூறிடும் பாதகரே. (௩௰)

வாய்நாறுமூழன் மயிற்சிக்குநாறிடுமையிடுங்கண், பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய்ச், சீநாறும்யோனி யழுக்குநாறுவிந்திரியச்சேருசிந்திப், பாய்நாறுமங்கையர்க்கோ விங்ஙனேமனம் பற்றியதே. (௩௧)

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண்டுரைப்படியே, செருக்கித்தரிக்க திருநீறுமுண்டுதெருக்குப்பையிற், றரிக்கக்கரித்துணி யாடையுமுண்டெந்தச் சாதியினு, மிரக்கத்துணிந்துகொண்டேன் குறைவேதுமெனக்கில்லையே. (௩௨)

ஏதப்பட்டாயினி மேற்படும்பாட்டையி தென்றறிந்து, போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று புல்லறிவால், வாதைப்பட்டாய்மட மாதர்கலவி மயக்கத்திலே, பேதைப்பட்டாய்நெஞ்சமே யுனைப்போலில்லை பித்தருமே. (௩௩)

சுரப்பற்றுவல்வினை சுற்றமுமற்றுத்தொழில்களற்றுக், கரப்பற்றுமங்கையா சையிணக்கற்றுகவலையற்று, வசைப்பற்றுநாதனைவாயாரவாழ்த்தி மனமடங்கப், பரப்பற்றிருப்பதன்றோ பரமாபரமானந்தமே. (௩௪)

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லா, நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத், தாய்போற்கருதித் தமர்போலனைவர்க்குந் தாழ்

ணைம்சொல்லி, சேய்போலிருப்பர்கண்டீ ருண்மைஞான
ந்தெளிந்தவரே. (௩௫)

விடக்கேபருந்தின் விருந்தேகமண்டலவீணனிட்ட,
முடக்கேபுழுவந் துறையிடமேநலமுற்றுமிலாச், சடக்
கேகருவிதளர்ந்துவிட்டாற்பெற்ற தாயுந்தொடார்த்,தொ
டக்கேயுனைச்சுமந்தே னின்னினேதுசுக்மெனக்கே ()

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன வாவதி
ல்லை, தொழுதாற்பயனென்ன வின்னையொருவர்சுடவு
ரைத்த, பழுதாற்பயனென்ன நன்மையுந்தீமையும் பங்
கயத்தோ, ரெழுதாப்படிவருமோ சலியாதிரென் னே
ழநெஞ்சே. (௩௭)

செல்வரைப்பின்சென் றுபசாரம்பேசித் தினந்தினமு
ம், பல்லினைக்காட்டிப் பரதவியாமற்பராநந்தத்தி, னெ
ல்லையிற்புக்குநல் லேகாந்தமாயெனக் காமிடத்தே, யல்
லலற்றென்றிருப்பே னுலகீழலரும்பொருளே. (௩௮)

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப், போ
ரீர்சமணரைக் கழுவேற்றுநீற்றைப் புறந்திண்ணையிற்,
சாரீரனந்தலைச் சுற்றத்தைநீக்கிச் சுகநகைக்க, வேரீரும
க்கவர் தாமேதருவரிணையடியே. (௩௯)

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமன
மே, மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூ,
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா,
யாற்றிக்கிடந்துந் துறையறியாமலலைகின்றையே. (௪௰)

ஓங்காரமாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து,
பாங்காய்முளைத்த பயனறிந்தாற்பதினாலுலகு, நீங்காம
னீங்கி நிறையாநிறைந்துநின்றவுருவா, யாங்காரமானவர்
கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே. (௪௧)

விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கையிலைப்,
பதியார்துடைப்புநம் மாலணுகாது பரானந்தமே, கதி
யாகக்கொண்டு மற்றெல்லாந்துயிலிற் கனவெனநீ, மதி
யாதிருமனமே யிதுகாணன்மருந்துனக்கே. (௪௨)

நாய்க்குண்டுதெண்டு நமக்குண்டுபிச்சை நமனைவெல்
ல, வாய்க்குண்டுமந்திர பஞ்சாட்சரமதியாமல் வரும்,
பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்ற பிறவிப்பிணி,
நோய்க்குண்டுதேசிகன் றன்னருணோ[illegible]ங்க ளுக்கு
தற்கே. (௪௩)

சேமங்கணிட்டைகள் வேதங்களாகமநீதிநெறி, யோ
மங்கடர்பணஞ் சந்திசெபமந்தரயோகநிலை, நாமங்கள்ச
ந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே, சாமஞ்சமேடாறுமி
வர்செய்யும்பூசைகள் சற்பனையே. (௪௪)

நானெத்தனைபுத்தி சொன்னாலுங்கேட்டிலை நன்னெ
ஞ்சமே, யெனிப்படிக்கேட் டுழலுகின்றாயினி யேதுவி
லா, வானத்தின்மீனுக்கு வன்றூண்டிலிட்ட வகையது
போற், போனத்தைமீள நினைக்கின்றனையென்ன புத்தி
யிதே (௪௫)

அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புல
னும், வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செ

ய்து, விஞ்சத்திறத்திச் சதாசிவமென்கின்ற வித்தைவிட்டுப், புஞ்சக்களைப்பற்றித் தேன்வளர்த்தேன்சிவ போகத்தையே. (௪௬)

தாயாருஞ்சுற்றமும் பெண்டீருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநா, ணீயாருநானு ரெனப்பகர்வாரிந்த நேரத்திலே, நோயாரும்வந்து குடிகொள்வரேகொண்ட நோயுமொருபாயாருநீயுமல்லாற் பின்னையேதுநட் பாமுடலே. (௪௭)

ஆயும்பொழுதுமயிர்க்கால்கடோறுமருங்கிருமி, தோயுமலக்குட்டை யாகியகாயத்தைச்சுட்டுவிட்டாற், பேயுனடன மிடுங்கடமாமென்றுபேசுவதை, நீயுமறிந்திலையோ பொருட்டேட நினைந்தனையே. (௪௮)

பூணும்படிக்கல்லபொன்னுக்குத்தானல்லபூமிதனைக் காணும்படிக்கல்ல மங்கையற்கல்ல நற்காட்சிக்கல்ல, சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச், சாணும்வளர்க்க வடியேன்படுந்துயர்சற்றல்லவே. (௪௯)

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க், கெட்டாதபுட்ப மிறையாததீர்த்தமினிமுடிந்து, கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே, முட்டாத பூசையன்றோ குருநாதன்மொழிந்ததுவே. (௫௰)

எருமுட்டைபிட்டு ணுகிர்ந்திடுஞ்செல்லுக் கெவரழுவார், கருமுட்டைபுச்குக்சமலகன்றாய் கனதுக்கமதாய் பெருமுட்டுப்பட்டவர்போலழும்பேதையிற் பிதற்றுகிறீ, ரொருமுட்டும்விட்டு மரணமமென்றைக்கு மோதுமினே. (௫௧)

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ்செந்
தீ, யையாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துள்
ளே, மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெ
றும், பொய்யாய்ப்பழங்கதையாய்க் கனவாய்மெல்லப்
போனதுவே. (௫௨)

ஆயாய்பலகலை யாய்ந்திடுந்தூய வருந்தவர்பாற், போயா
கிலுமுண்மையைத் தெரிந்தாயில்லைபூதலத்தில், வேயா
ர்ந்ததோளியர் காமவிகாரத்தில்வீழ்ந்தழுந்திப், பேயா
ய்விழிக்கின்றனை மனமேயென்ன பித்துனக்கே. (௫௩)

அடியாருறவு மறன்பூசைநேசமுமன்புமன்றிப், படி
மீதில்வேறு பயனுளதோபங்சயன்வகுத்த, குடியானசு
ற்றமு நீதாரமும்வாழ்வும் குயக்கலங்கள், தடியாலடியு
ண்டலா ரொக்குமென்றினஞ் சார்ந்திலரே. (௫௪)

ஆங்காரப்பொக்கிஷங் கோபக்களஞ்சியமாணவந்தா,
னீங்காவரண்மனை பொய்வைத்தகூடய்விண்ணிடிவளர்
தேங்கார்பெருமதிற் காமவிலாசமித்தேகங்கந்தல், பாங்
காயுனைப்பணிந் தெட்படிஞானமபலிப்பதுவே. (௫௫)

ஒழியாப்பிறவி யெடுத்தேங்கியேங்கி யுழன்றநெஞ்
சே, யழியாப்பதவிக் கவுடதங்கேட்டியநாதியனை, மழு
மான்கரத்தனை மால்விடையானைமனத்திலுன்னி, விழி
யாற்புனல்சிந்தி விம்மியழுநன்மைவேண்டுமென்றே. ()

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலுண்
டோ, பேய்க்கொருஞானம பிடிபடுமோபெருங் காஞ்சி

ரங்கா, யாக்குவரார தருந்துவராரறு போலுடம்பு, திக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச்செப்புமினே. ()

கச்சிற்கிடக்குங் கனதனத்திற்கடைக்கண்கள்பட்டே, இச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சேயிமவான்பயந்த, பச்சைப்பசுங்கொடி யண்ணாமுலைப்பங்கர்பாதத்திலே, தைச்சுக்கிடமனமே யொருகாலுந்தவறில்லையே. (௫அ)

மானார்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங், கோனாகியென்னைக் குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லைப், போனாலும்பேறிருந் தாலுநற்பேறிதுபொய்யன்றுசுகர, னானாலுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே. ()

சற்றாகிலுந்தன்னைத் தானறியாய்தனை யாய்ந்தவரை, பற்றாகிலுமுரைக்கப் பொருந்தாயுனக்கானதில்லை, பற்றாய்க்குருவைப் பணியாய்பரத்தையர்பாலிற்சென்றன், பெற்றாய்மடநெஞ்சமேயுனைப்போலில்லைபித்தனுமே. ()

உளியிட்டகல்லை மொப்பிடசாந்தையு மூத்தையறப், புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே, யொளியிட்டதாளிரண் டுள்ளேயிருந்துவதுண்மையென்று, வெளியிட்டடைத்துவைத்தே யினிமேலொன்றும் வேண்டிலனே. (௬௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# பட்டணத்துப்பிள்ளையார்

# தாயாருக்குத்தகனகிரியை.

## செய்கையிற்பாடிய-வெண்பா.

ஐயிரண்டுதிங்களா யங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பே னினி. (௧)

முந்தித்தவங்கிடந்து முந்நூறுநாட்சுமந்தே
யந்திப்பகலாச்சிவனை யாதரித்து-தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
யெரியத்தழன்மூட்டுவேன். (௨)

வட்டிலிலுந்தொட்டிலிலு மார்மேலுந்தோண்மேலுங்
கட்டிலிலும்வைத்தென்னைக் காதலித்து-முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச் சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். (௩)

நொந்துசுமந்துபெற்று நோகாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத் தாழாமே-யந்திபகல்
கையிலேகொண்டென்னைக் காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டு வேன். (௪)

அரிசியோநானிடுவே னாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்து மகிழாம-லுருசியுள்ள
தேனேயமிர்தமே செல்வத்திரவியபூ
மானேயெனவழைத்த வாய்க்கு. (௫)

அள்ளியிடுவதரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோ கூசாமன்-மெள்ள
முகமேன்முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனேயெனவழைத்தவாய்க்கு. (௬)

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே. (௭)

வேகுதேதீயதனில் வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியேனையகோ-மாகக்
குருவிபறவாமற் கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்தக் கை. (அ)

வெந்தாளோசோணகிரி வித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னைமறந்தாளோ-சந்ததமு
முன்னையேநோக்கி யுவந்துவரங்கிடந்தென்
றன்னையேயின்றெடுத்ததாய். (௩௯)

வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்துநீருனாள்-பாற்றெளிக்க
வெல்லீரும்வாருங்க ளேதென்றிரங்காமல்
லெல்லாம் சிவமயமேயாம். (௪௦)

மென்றுவிழுங்கி விடாய்கழிக்கநீர்தேட
லென்றுவிடுமெனக்கென்கோவே-நன்றி
கருதார்புரமூன்றுங் கட்டழலாற்செற்ற
மருதாவுன்சன்னதிக்கேவந்து. (௪௧)

சிற்றம்பலமுஞ் சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடி விட்டோமே-நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதே பேதமடநெஞ்சங்
கறந்திடத்தைநாடுதேகண். (௪௨)

தோடவிழும்பூங்கோதைத் தோகையுனையிப்போது
தேடினவர்போய்விட்டார் தேறியிரு-நாடிநீ
யென்னைநினைத்தால்விடுப்பி லுதைப்பேன்
உன்னைநினைத்தாலுதை. (௪௩)

வாசற்படிகடந்து வாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே-யாசைதனைப்
பட்டிறந்தகாலமெலாம் போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைச்சொல். (௧௪)

கண்டங்கரியதாங் கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போலவழங்கியதாங்-தொண்ட
ருடலுருகத்தித்திக்கு மோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு. (௧௫)

ஓடுவிழுந்துசிப்பாய் மொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துக்கொண்டேன்-கடுவருந்துந்
தேவாதிதேவன் றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி. (௧௬)

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம்வெண்ணீறு
காதணங்களெல்லாங்கணநாதர்-பூவுலகி
லீதுசிவலோகமென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றியூர் (௧௭)

நச்சரவம்பூண்டானை நன்றாத்தொழுவதுவு
பிச்சையிலேதானங்கிருப்பதுவும்-பிச்சதனை
வாங்குவதுமுண்பதுவும் வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந்தானேசுகம். (௧௮)

இருக்குமிடந்தேடி யென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தா லுண்பேன்-பெருக்க
வழைத்தாலும்போகே னரனேயென்றேக
மிலைத்தாலும்போகேனினி. (சகூ)

விட்டுவிடப்போகுதுயிர் விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகிறார்சுற்றத்தார்-பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேத்துங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவேசுகம். (உ0)

ஆவியொடுகாயமழிந்தாலுமேதினியிற்
பாவியென்றுநாமம் படையாதே-மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும் வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப்போலேதிரி. (உக)

ஆரூரரிங்கிருக்கவவ்வூர்த் திருநாளென்
றூரூர்கடோறுமுழலுவீர்-நேரே
யுளக்குறிப்பைநாடாத வூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடுவீர். (உஉ)

எத்தனையூரெத்தனைவீ டெத்தனைதாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்கவேனென்றே னித்த
மெனக்குக்களையாற்று யேகம்பாகம்பா
வுனக்குத்திருவிளையாட்டோ. (உங)

கண்ணுந்தளலாற வாணும்புன்சயாற
வெண்ணரியதாயுமிளைப்பாறப்-பண்ணுமயன்
கையாலவுமடியேன் காலாறவுங்கண்பா
ரையா திருவையாறு. (௨௨)

இப்பிறப்பைநம்பி யிருப்பரோநெஞ்சமே
வைப்பிருக்கவாயின்மனையிருக்கச்-சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண் மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக்கண்டு. (௨௫)

மேலுமிருக்கவிரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந்திலையே சிந்தையே-கால்கைக்குக் [டவுடல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப் பட்
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு. (௨௪)

ஒன்பதுவாய்த்தோற்பைக் கொருநாளைப்போலவே
அன்புவைத்துநெஞ்சே யலைந்தாயே-வன்கழுக்க
கொத்தித்தத்திச் சட்டைத்தட் டடிக்கப்பட்டுக்
கத்திகுத்தித் தின்னக்கண்டு. (௨௭)

இன்னம்பிறக்க விசைவையேநெஞ்சமே
மன்னரிவரென்றிருந்து வாழ்ந்தவரை-முன்ன
மெரிந்தகட்டைமீதி லிணைக்கோவணத்தை
புரிந்துருட்டிப் போட்டதுகண்டு. (௨௮)

முதற்சங்கமுதூட்டு மொய்க்குழலார்தம்மை
நடுச்சங்கநல்விலங்குபூட்டுங்-கடைச்சங்க
மாம்போதனவூது மம்மட்டோவிம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்தநலம். (௨௯)

பொய்யைமொழியாய்ப் புலாலைவிடாய்க்காளத்தி
ஐயரையெண்ணாயறஞ்செய்யாய்-வெய்ய
சினமேயொழியாய்த் திருவெழுத்தைந்தோதாய்
மனமேயுனக்கென்ன மாண்பு. (௩௰)

எருவாய்க்கிருவிரன்மேலேறுண்டிருந்து
கருவாய்க்கோகண்கலக்கப்பட்டாய்-திருவாரூற்
தேரோடுமவீதியிலேசெத்துக்கிடக்கின்றாய்
நீரோடுந்தாரைக்காநீ. (௩௧)

மாதாவுடல்சலித்தாள்வல்லவினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்துவிட்டேன்-நாதா
இருப்பையூர்வாழ்சிவனேயின்னமோரன்னை
கருப்பையூர்வாராமற்கா (௩௨)

அத்திமுதலெறும்பீறானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா-மெத்தப்
பசிக்குதைய்யாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதைய்யாகாரோணரே. (௩௩)

எத்தனைநாள்கூடியெடுத்தசரீரமிவை
யத்தனையுமண்டின்பதல்லவோ-வித்தகனார்
காலும்பிடித்துமெள்ளக்கங்குல்பகலற்றிடத்தே
மேலைக்குடியிருப்போமே. (கச)

எச்சிலென்றுசொல்லியிதமகிதம்பேசாதே
யெச்சிலிருக்குமிடமறியீ-ரெச்சிறனை
யுய்த்திருந்துபார்த்தாலொருமைவெளிப்படும்பின்
சித்தநிராமயமாமே. (கரு)

காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்படுமுன்னே-மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னே யூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானே கூறு. (கசு)

எத்தனைபேர்நட்டகுழி யெத்தனைபேர்தொட்டமுலை
யெத்தனைபேர்பற்றியிழுத்தவிதழ்-நித்தநித்தம
பொய்யடாபேசும்புவியின்மடமாதரைவிட்
டுய்யடாவுய்யடாவுய். (கஎ)

இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந்தீங்கினையுண்ணாதே - பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருப்பநாய்நரிகள்பேய்கழுகு
தம்மதென்றுதாமிருக்குந்தான். (கஅ)

எத்தொழிலைச்செய்தாலு மேதவத்தைப்பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே-வித்தகமாய்க்
காதிவிளையாடி யிருகைவீசிவந்தாலுந்
தாதிமனநீர்க்குடத்தேதான். (ந

மாலைப்பொழுதின்று மஞ்சளரைத்தேகுளித்து
வேலைமினுக்கிட்டு விழித்திருந்து-சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள் பெயரிட்டாள்பெற்றபிள்ளை
பித்தனெனின்செய்வாள் பின் (ச

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்தார்பாடல்

முற்றிற்று,